2012 மே 8] *[டாக்டர் வி.எஸ். விஜய்]*

*அறிக்கை சமர்ப்பிக்க உள்ளது. அதன் அடிப்படையில். அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

## 3. அறிக்கைகள் அளித்தல்

### மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர் அவர்கள்.*

**திரு. பி.ஜி. நாராயணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாரும் எல்லாமும் பெறவேண்டுமென்ற உயர்ந்த இலட்சியத்தோடு பொற்கால ஆட்சி நடத்திவரும் ஏழையெளிய மக்களின் விடிவெள்ளி மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, இந்த அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2011-2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் 2 ஆவது முதல் 5 ஆவது வரையிலான 4 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

## 4. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

**(அ) கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசால் நிறுத்தப்பட்ட ஈட்டுக் கூலியை வழங்குதல் மற்றும் பட்டு வளர்ப்பு விவசாயிகளுக்கு மானியம் வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதி 110-ன்கீழ் 2 அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருப்பதோடு, விவசாயத்திற்கு அடுத்தபடியாக கிராமப்புற*

மக்களுக்குப் பெருமளவு வேலைவாய்ப்பினை வழங்கிவரும் தொழிலாக நெசவுத் தொழில் விளங்கி வருகிறது.

நெசவுத் தொழிலாளர்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் நெசவாளர்களின் குடும்பத்திற்கு ஓய்வூதியம், காப்பீட்டுத் திட்டம், நெசவாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகை போன்ற அரிய பல திட்டங்களை எனது தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

நெசவாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில், கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களிடமிருந்து, அவர்கள் ஈட்டும் ஊதியத்தில் ரூபாய்க்கு 8 பைசா சந்தாவாக வசூலிக்கப்படுகிறது. மாநில அரசு தனது பங்காக 4 பைசாவை செலுத்தி வருகிறது. மத்திய அரசு தனது பங்காக 4 பைசாவை 2007 ஆம் ஆண்டு வரை செலுத்தி வந்தது. ஆகமொத்தம், நெசவாளர்கள் பெறும் ஊதியத்தில் ஒரு ரூபாய்க்கு 16 பைசா சிக்கன நிதியாக அவர்களது சேமிப்புக் கணக்கில் செலுத்தப்பட்டு, அத்தொகைக்கு மாநில அரசு வட்டியும் வழங்கி வருகின்றது.

முற்பகல் 10-40

1-4-2007 முதல் மத்திய அரசு தனது பங்களிப்பினை நிறுத்திவிட்டதால், நெசவாளர்களுக்கு மத்திய அரசின்மூலம் கிடைத்து வந்த சிக்கன நிதி மற்றும் அதற்குக் கிடைக்கும் வட்டித் தொகையும் குறைந்துவிட்டது. பாதிக்கப்பட்ட நெசவாளர்கள், 2007 ஆம் ஆண்டு முதல் இக்கோரிக்கையினைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். நெசவாளர்களின் ஐந்தாண்டுக் கால கோரிக்கையினை நிறைவேற்றும்விதமாக, கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் செயலாக்கத்திற்கு நெசவாளர்கள் ஈட்டும் கூலியில் வழங்கப்பட்டு வரும் மாநில அரசின் பங்களிப்பான 1 ரூபாய்க்கு 4 பைசாவுடன், மைய அரசால் நிறுத்தப்பட்ட பங்களிப்பான 1 ரூபாய்க்கு 4 பைசாவையும் சேர்த்து, 8 பைசாவாக இனி உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், தமிழக அரசுக்கு ஆண்டொன்றுக்கு 5 கோடி

ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். இதன்மூலம், நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்துள்ள 76,051 கைத்தறி நெசவாளர்கள் நேரடியாகப் பயனடைவர் என்பதை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோன்று, கிராமப்புற மக்களுக்கு தொடர் வருவாய் மற்றும் வேலைவாய்ப்பினை வழங்கி, தேசிய அளவில் வெண்பட்டு உற்பத்தியிலும், பட்டுக் கூடு உற்பத்தித் திறனிலும், இளம் புழுக்களை வளர்த்து விநியோகிப்பதிலும், தொகுப்பு அபிவிருத்தித் திட்டத்திலும் தேசிய அளவில் முதல் நிலை எய்தியுள்ள பட்டு வளர்ச்சித் துறையின் சாதனைகள் மேலும் தொடரும் வகையிலும், இந்தச் சாதனைகளுக்குக் காரணமான தமிழகப் பட்டு விவசாயிகளை ஊக்குவிக்கும் வண்ணமும், இதுவரை, மல்பரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 4,125 ரூபாய் என வழங்கப்பட்டு வந்த மானியத் தொகை 6,750 ரூபாய் ஆக உயர்த்தி வழங்கப்படும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்மூலம், ஒவ்வொரு விவசாயிக்கும் அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு 16,875 ரூபாய் வரை மானியம் கிடைக்கும். நடப்பாண்டில் 5,000 ஏக்கர் பரப்பில் மல்பரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு மானியமாக மொத்தம் 3 கோடியே 37 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். மேலும், பட்டு வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகள் நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்களைப் பயன்படுத்தி அதிக அளவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக, ஒவ்வொரு விவசாயிக்கும் தற்போது வழங்கப்பட்டுவரும் மானியத் தொகையான 30,000 ரூபாய் நடப்பு ஆண்டு முதல் 37,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பாண்டில் 1,200 பட்டு விவசாயிகளுக்கு மொத்த மானியமாக 4.5 கோடி ரூபாய் வழங்கப்படும். இதன்மூலம், பட்டு விவசாயிகள் ஒரு ஹெக்டேருக்கு ஆண்டொன்றுக்கு குறைந்தபட்ச நிகர வருமானமாக ஒரு இலட்சம் ரூபாய் வரை பெற இயலும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)